# தமிழ்நாடு மின்வாரிய தொழிற் சங்கங்களின்
# கூட்டு நடவடிக்கை குழு
# சென்னை

நாள்: 27.07.2020

பெறுநர்

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை 600 002

ஐயா,

வணக்கம்

பொருள் : **மின் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் - அறிமுக சந்திப்பு மற்றும் தொழிற்சங்கங்களை - தொழிலாளர் பிரச்சனை குறித்து - சந்திக்க நேரம் ஒதுக்குவது - தொடர்பாக**

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராக தாங்கள் 20.06.2020 அன்று பொறுப்பேற்று உள்ளீர்கள். தங்களுக்கு தொழிற்சங்க கூட்டு நடவடிக்கைக் குழு சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறோம்.

அறிமுக சந்திப்பு என்ற முறையில் அனுமதி கேட்ட பொழுது Covid -19-ஐ காரணம் காட்டி சந்திக்க மறுத்து வந்தீர்கள்.

தற்போது ஏற்பட்டுள்ள அசாதரண சூழ்நிலையில் மின்வாரிய ஊழியர்கள், அலுவலர்கள், பொறியாளர்கள், ஆகியோர்கள் தடையில்லாத மின்சாரத்தை விநியோகித்து மக்களை பாதுகாத்து வருவதில் சிறப்பாக பணியாற்றி வருகின்றனர்.

மின்வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரை அறிமுக சந்திப்போடு வாரத்தில் ஒருநாள் தொழிற்சங்கங்கள் சந்தித்து கொள்கை சார்ந்த தொழிலாளர் பிரச்சனைகளையும், நிர்வாகப் பிரிவில் தீர்க்க முடியாதவைகளையும் வாரியத் தலைவர்களாக உள்ளவர்களிடம் எடுத்துக்கூறி தீர்வுக்கண்டு வருவது காலம் காலமாக இருந்து வரும் ஒரு மரபாகும்.

மின்வாரிய ஊழியர்கள் அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களின் பிரச்சனைகளை தீர்வுக்காண முடியாமல் உள்ள நிலையில் வாரியத்தலைவர் இணை மேலாண்மை இயக்குநரை சந்தித்து பேசுமாறு தங்கள் அலுவலகம் மூலமாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் இணை மேலாண்மை இயக்குநரோ தனக்கு எந்த அதிகாரமும் இல்லை எனக்கூறி உங்களின் பிரச்சனைகளை தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரிடம் பேசுகிறேன் எனக்கூறுகிறார். இதனால் தேவையற்ற காலதாமதமே மிஞ்சி வருகிறது.

மின்வாரிய தலைவர் எங்களை நேரிடையாக சந்தித்து பிரச்சனைகளை பேசினால் மட்டுமே ஊழியர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களின் கோரிக்கையின் மீது தீர்வுக்காண இயலும்.

எனவே, எங்களுடைய நியாயமான கோரிக்கையை ஏற்று மின்வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் தொழிற்சங்கங்களை சந்திக்க வாரம் ஒருமுறையும் தவிர்க்க இயலாத அவசர சூழ்நிலையின் பொழுது சந்திக்க நேரம் ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக்கொள்வதோடு, தொழில் உறவை மேம்படுத்த கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

மின்சார தொழிலாளர் சம்மேளனம்

கணக்காயர் களத் தொழிலாளர் சங்கம்

தொழிலாளர் முன்னேற்ற சங்கம்

மின்ஊழியர் மத்திய அமைப்பு (சிஐடியு)

மின்சார பிரிவு அண்ணா தொழிற் சங்கம்

மின்வாரிய ஜனதா தொழிற் சங்கம்

ஐ.என்.டி.யு.சி (சேவியர்)

ஐ.என்.டி.யு.சி (சொர்ணராஜ்)

மின்வாரிய பொறியாளர் சங்கம்

மின் ஊழியர் காங்கிரஸ் (என்.எல்.ஓ)

தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம்

மின்வாரிய பொறியாளர் கழகம்

கணக்கு அலுவலர் சங்கம்

பி.எம்.எஸ்

கார்டு பில்லிங் ஸ்டாப் யூனியன்

டாக்டர் அம்பேத்கர் யூனியன்

மின்வாரிய பொறியாளர் யூனியன்

எம்ப்ளாயீஸ் பெடரேஷன்